கருநாடக அரசு

செம்மொழித் தமிழ்

CHEMMOZHIT THAMIZH

முதல் மொழி

பாகம் - 2

FIRST LANGUAGE TAMIL

3

ஆம் வகுப்பு

STANDARD

பயிற்சியுடன் கூடிய பாடப்புத்தகம்

@KTBS
NOT TO BE REPUBLISHED

Karnataka Text Book Society (R.)
6th Cross, Malleshwaram
Bengaluru - 560 003.

G4X1U6

பாட எண்	பொருளடக்கம்	பக்கம்
11.	விழாக்கள்	1
12.	கல்விச் செல்வம் (பாடல்)	10
13.	செய்திப் பரிமாற்றத்தின் வளர்ச்சி	14
14.	திருக்குறள் (பாடல்)	22
15.	விழிப்படையுங்கள்	29
16.	கொன்றை வேந்தன் (பாடல்)	34
17.	அம்மா போட்ட புதிர்	37
18.	வீரப் பெண்மணி ஓபவ்வா	41
19.	கங்குபாய் ஆனுகல்	48
20.	சிக்கமகளூர் மாவட்டம்	56
21.	படவிளக்க அகராதி	63
	சொற் பட்டியல்	69

@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடம் 11

விழாக்கள்

(மூன்றாம் வகுப்பு குழந்தைகள் அனைவரும் வகுப்பறையில் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், சிலர் விளையாடிக் கொண்டும் இருக்கிறார்கள். அப்பொழுது தமிழ் ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைகிறார்)

குழந்தைகள் : வணக்கம் ஐயா !

ஆசிரியர் : வணக்கம் குழந்தைகளே !

© KTBS NOT TO BE REPUBLISHED

(அருண், அகமது மற்றும் அந்தோணி மூவரும் ஆசிரியர் நுழைந்ததைக் கவனிக்காமல் மிகவும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்)

ஆசிரியர் : (மூவரையும் பெயர் சொல்லி அழைத்து) என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? நான் வகுப்பில் நுழைந்ததைக் கூட கவனிக்கவில்லை.

அகமது : ஐயா !அடுத்த வாரம் வெள்ளியன்று ரம்சான் பண்டிகை கொண்டாட புதிய ஆடைகள் வாங்கிவந்ததைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.



ஆசிரியர் : அகமது ! நீ ரம்சான் பண்டிகை கொண்டாடும் முறையை வகுப்பின் முன் வந்து கூறு. மற்ற மாணவர்களும் தெரிந்து கொள்வார்கள் அல்லவா ?

அகமது : இஸ்லாமிய ஆண்டின் ரமலான் மாதத்தில் நாங்கள் 30 நாட்களும் நோன்பு இருந்து, ஒவ்வொரு நாளும் 5 முறை அல்லாவைப் பிரார்த்தனை செய்வோம். 30 வது நாள் அன்று இரவு பிறைச் சந்திரனைக் கண்ட பிறகு ரம்சான் பண்டிகையைக் கொண்டாடுவோம். அன்று புத்தாடைகள் அணிந்து, வீட்டில் விருந்து உண்டு, பிறகு உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு இனிப்புகளைக் கொடுத்து வாழ்த்து கூறி மகிழ்வோம்.

ஆசிரியர் : நன்று அகமது ! நீ உன் இடத்திற்குச் சென்று அமர்ந்து கொள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

அந்தோணி : ஐயா ! நாங்கள் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதைப் பற்றி கூறலாமா ?

ஆசிரியர் : தாராளமாகக் கூறு.

அந்தோணி : ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 25 ஆம் நாள் நாங்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவோம். அன்று ஏசு கிறிஸ்துவின் பிறந்த நாளாகும். ஏசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். மக்களின் நன்மைக்காக ஏசு கிறிஸ்து அதனைத் தாங்கிக் கொண்டார்.

ஆசிரியர் : கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுவதைப் பற்றிக் கூறு.

அந்தோணி : பண்டிகை தினத்தன்று அதிகாலையிலேயே எழுந்து தேவாலயத்திற்குச் செல்வோம். இயேசுவைப் போற்றி இறைப் பாடல்களைப் பாடுவோம். புத்தாடைகள் அணிந்து வீட்டில் விருந்து உண்டு, நண்பர்கள், உறவினர்கள் வீட்டிற்குச் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு, இனிப்புகள் உண்போம்.

ஆசிரியர் : நன்றாகக் கூறினாய் அந்தோணி. நீ உன் இருக்கையில் அமர்ந்து கொள். அருண் நீ கொண்டாடும் தைப்பொங்கல் விழாவைப் பற்றி உன் வகுப்புத் தோழர்களுக்குக் கூறு.

© KTBS NOT TO BE REPUBLISHED

அருண் : பொங்கல் விழாவை நாங்கள் நான்கு நாட்கள் கொண்டாடுவோம். மார்கழித் திங்களின் இறுதி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடப்படும். தைத்திங்களின் முதல் நாளைத் தைப் பொங்கல் விழாவாகக் கொண்டாடுவோம். அடுத்து வரும் இரண்டு நாட்களும் மாட்டுப் பொங்கல் மற்றும் காணும் பொங்கல் விழாவாகக் கொண்டாடப்படும். தைப்பொங்கல் விழாவை உழவர் விழா எனவும் கூறுவர்.

ஆசிரியர் : பொங்கல் விழா எதற்காகக் கொண்டாடுகிறோம் எனத் தெரியுமா அருண் ?

அருண் : தெரியும் ஐயா ! நாம் தினமும் உண்ணும் உணவுப் பொருட்களை நமக்கு விளைவித்துக் கொடுப்பவர்கள் உழவர்கள்தான். இவர்கள் நிலத்தை உழ மாடுகள் உதவுகிறது. நமக்கு சூரிய சக்தியும் மிகவும் முக்கியமானது. எனவே, நன்றாக உழைத்து நமக்கு உணவுப் பொருட்களைக் கொடுக்கும் உழவர்கள் மாடுகள் மற்றும் சூரியனுக்கு நன்றியைத் தெரிவிப்பதற்காக நாம் பொங்கல் விழாவைக்

கொண்டாடுகிறோம். நாங்களும் புத்தாடைகளை அணிந்து இனிப்புகளை எடுத்துக் கொண்டு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று இனிப்புகளையும் வாழ்த்துகளையும் பரிமாறிக் கொள்வோம்.

ஆசிரியர் : நன்று அருண் ! நீ உன் இருக்கையில் அமர்ந்து கொள். மாணவர்களே ! இப்பண்டிகைகள் கொண்டாடும் முறைகளிலிருந்து நீங்கள் அறிந்து கொள்வதென்ன ?

மாணவர்கள் : நாம் அனைவரும் புத்தாடை அணிந்து இனிப்புகள் உண்கிறோம். வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கிறோம்.

ஆசிரியர் : குழந்தைகளே ! நாம் அனைவரும், அதாவது அனைத்து மதத்தினரும் பண்டிகை கொண்டாடும் முறை ஒரே மாதிரியாக இருப்பதுடன், அனைத்து மதத்தினரும் மற்ற மதப் பண்டிகைகளில் பங்கேற்கிறோம். அனைவரும் ஒன்று கூடி மகிழ்ச்சியாக இருக்கிறோம். நமது நாட்டின் ஒருமைப்பாட்டை இப்பண்டிகைகள் மேலும் வலுப் படுத்துகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ரம்சான் பண்டிகை கொண்டாடுபவர்கள் ....
2. கிறிஸ்துமஸ் பண்டிகை .... நாள் கொண்டாடப் படுகிறது.
3. .... விழா தை மாதம் கொண்டாடப்படும்.

ஆ. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும் :

1. ரம்சான் பண்டிகை எவ்வாறு கொண்டாடப் படுகிறது ?

விடை..

....

2. கிறிஸ்துமஸ் பண்டிகை எதற்காகக் கொண்டாடு கிறார்கள் ?

விடை..

....

3. பொங்கல் விழா கொண்டாடப்படுவதற்கான காரணம் என்ன ?

விடை..

....

NOT TO BE REPUBLISHED @KTBS

இ. கீழ்க் காணும் சொற்களில் பண்டிகைகளின் பெயர்களின் எழுத்துக்கள் மாறியிருக்கின்றன. சரியான சொற்களை எழுதுக:

எடுத்துக்காட்டு : ல்பொகங் - பொங்கல்

1. ளிபாதீவ -
2. ரீபத்க் -
3. ஸ்துகிறிஸ்ம -
4. சாரம்ன் -

ஈ. வட்டத்தில் குறிப்பிட்டுள்ள பண்டிகையைப் பற்றி வட்டத்தைச் சுற்றியுள்ள சொற்களைப் பயன்படுத்தி ஐந்து வரிகள் எழுதுக :





உ. செயல்பாடு 1 : நீங்கள் வசிக்கும் பகுதியில் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாவினைப் பற்றி கூறவும் :

செயல்பாடு 2 :

நமது நாட்டில் மற்ற மாநிலங்களில் கொண்டாடப் படுகின்ற விழாக்களின் படங்களைச் சேகரித்து வந்து, அவ்விழாக்களைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

செயல்பாடு 3 :

நீங்கள் கொண்டாடும் மற்ற விழாக்களைப் பற்றி வகுப்பறையில் உரையாடல்கள் நடத்தவும்.

@TBS
NOT TO BE REPUBLISHED

ஊ படங்களைச் சொற்களுடன் பொருத்துக :



விநாயக சதுர்த்தி

ஹோலிப் பண்டிகை



பக்ரீத் பண்டிகை

@KTBS NOT TO BE REPUBLISHED

எ. வடமொழி எழுத்துக்களை வட்டமிடுக :

எடுத்துக்காட்டு : ஸ் - கிறி ஸ் து ம ஸ் சர ஸ் வதி

1. ஷ - வருஷம் ஷண்முகன்
2. ஜ - ஜெயம் கஜேந்திரன்
3. ஹ - நரஹரி ஹரிஹரன்
4. ஸ்ரீ - பத்மஸ்ரீ ஸ்ரீரங்கம்

ஏ. ஒலித்துப் பழகுக :

இரவில் மழை பெய்தது.

செடிகள் செழிப்பாய் வளர்ந்தன.

பழங்கள் பழுத்துக் குலுங்கின.

விலங்குகள் மகிழ்ச்சியில் துள்ளின.

நீர் பள்ளத்தை நோக்கிப் பாயும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

G9D2N6

பாடம் 12

கல்விச் செல்வம்

கல்வி என்னும் செல்வத்தைக்
கற்கும் சிறுவர் பெற்றிடவே
அள்ளிக் கொடுப்பார் ஆசிரியர்
அன்போ டேற்றே மகிழ்ந்திடுவாய் !

எத்தனைச் செல்வம் இருந்தாலும்
இணையாய்க் கல்விக்கு இவ்வுலகில்
எதுவும் இல்லை என்பதை நீ
இன்றே உணர்வாய் ; கற்றிடுவாய் !

கொடுக்கக் கொடுக்கக் குறையாது
கொடியவன் திருடவும் முடியாது
அடுத்தவர் வஞ்சித்தடைந் திடவும்
ஆகாச் செல்வம் அறிந்திடுவாய் !

- பெ.கு. வரதராசன்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

ஆசிரியர் குறிப்பு :

திருவாளர் பெரியப்பட்டி குப்புசாமி அவர்களின் குமாரர் திரு. பெ. கு. வரதராசன் அவர்கள் வித்வான், எம்.ஏ., பி.டி. பி.எச்.டி., முதலிய பட்டங்களும் ஆசுகவி, புலவரேறு, கவிஞர் கோமான், அருட்கவி முதலிய விருதுகளையும் பெற்றவர். பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மழலையமுதம் என்கிற புத்தகத்தில் மிக எளிய நடையில் குழந்தைகளுக்காக 60 பாடல்களை எழுதியுள்ளார்.

பொருள் அறிக :

பெற்றிடவே - அடைந்திடவே

மகிழ்ச்சி - இன்பம்

இணையாய் - ஈடாய்

வஞ்சித்து - ஏமாற்றி

கருத்துரை :

ஆசிரியர் கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும்போது சிறுவர்கள் அன்போடு ஏற்று மகிழ்வர். உலகில் எத்தனை செல்வம் இருந்தாலும் கல்விச் செல்வத்துக்கு ஈடானது எதுவுமில்லை என்பதை உணர்ந்திடுவாய். கல்வி கொடுக்கக் கொடுக்க குறையாது. திருடனால் திருடவும் முடியாது. ஏமாற்றி அபகரிக்கவும் முடியாது. அப்படிப்பட்ட கல்விச் செல்வம் புகழைச் சேர்க்கும்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. எதிர்ச் சொல் தருக :

இல்லை x முடியாது x

குறையாது x சுதந்திரம் x

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. அள்ளிக் கொடுப்பவர் ....

2. கொடுக்கக் கொடுக்கக் ....

3. கொடியவன் .... முடியாது.

இ. கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் :

1. சிறுவர்கள் எதை ஏற்று மகிழ்வர் ?

விடை...

....

2. திருட முடியாத செல்வம் எது ?

விடை...

....

3. கல்விச் செல்வத்தின் பயன் யாது ?

விடை...

....

©KTBS NOT TO BE REPUBLISHED

ஈ. செயல்பாடு :

1. எழுத்துக்களை மாற்றி பொருள் உள்ள சொற்களை உருவாக்குக :

எடுத்துக்காட்டு :

விகல் = கல்வி

பும்த்கத =

செவல்ம் =

ஆரியசிர் =

உ. ஒத்த ஒலிச்சொற்களை எழுதுக :

கொடுக்க	படிக்க	தடுக்க	நடக்க
மகிழ்ந்திடு	....	....	....
உணர்வாய்	....	....	....
பார்த்து	....	....	....

@KTBS
NOT TO BE REPUBLISHED

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

பாடம் 13

செய்திப் பரிமாற்றத்தின் வளர்ச்சி

J8I9U5

செய்திப் பரிமாற்றம், தொன்று தொட்டு படிப்படியாக எப்படி முன்னேறியது என்பதை நீங்கள் அறிவீர்களா ? கீழ்க் கண்ட படங்களைப் பாருங்கள். செய்திப் பரிமாற்றத்தின் வளர்ச்சியை அறிந்து கொள்ளுங்கள்.



முதன் முதலில் நாங்களே செய்திகளை எடுத்துச் சென்றோம்.



எங்களால் வேகமாக ஓடமுடியும். அதனால் எங்கள் மீது அமர்ந்து கொண்டு செய்திகளை எடுத்துச் சென்றனர்.

©KTBS NOT TO BE REPUBLISHED



நாங்கள் வெகு தொலைவு பறந்து சென்று செய்திகளை எடுத்துச் சென்றோம்.

நாங்கள் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும், உள்ளூர், வெளியூர்களுக்கும் தபால்களை அனுப்புவோம்.

நான் செய்திகளை பரப்புவதால் என்னை செய்தித் தாள் என்பர். முக்கியச் செய்திகள், வானிலை, விளையாட்டு, இரயில் நேரம், நிகழ்வுகள், விளம்பரங்கள் முதலியவற்றை எடுத்துச் செல்வேன்.

@KTBS NOT TO BE REPUBLISHED

செய்திகளை நான் வான்வெளியில் பரப்புவேன். நீங்கள் கேட்டு மகிழ்வீர்கள். அதனால் என்னை வானொலி என்பர்.



தட்டெழுத்து மூலம் செய்திகளை எடுத்துச் செல்வேன். என்னை தந்தி என்பர். ஆனால் இன்று நான் இல்லை. ஏன் தெரியுமா?

வீட்டில் உள்ளபடியே என்மூலம் மற்றவர்களை தொடர்பு கொள்ளலாம். செய்திகளை உடனே தெரிவிக்கலாம். தொலைவில் உள்ளவர்களோடு பேச உதவுவதால் என்னை தொலைபேசி என்பர்.



நான் பாட்டு, நாடகம், முக்கியச் செய்திகள், விளம்பரங்கள், சினிமா, விளையாட்டு, மருத்துவம், ஜோதிடம், திருமணப் பொருத்தம், தொடர்கதை முதலியவற்றின் ஒலி, ஒளி இரண்டையும் ஒரே சமயத்தில் வெளிப் படுத்துவேன். என்னை தொலைக்காட்சி என்பர்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

செய்திப் பரிமாற்றம், வலைத்தளம் மூலம் செய்திகளைப் பரிமாறுவேன். உலக முழுவதும் எல்லாத் துறைகளிலும் உள்ள விவரங்களை வெளிப் படுத்துவேன். என் மூலம் நீங்கள் திரைப்படங்களையும், தொடர்களையும் பார்க்கலாம். என் பெயர் கணினி.

என் மூலம் எங்கிருந்தாலும் யாருடனும் எப்பொழுதும் உடனுக்குடன் தொடர்பு கொள்ளலாம். யாரிடம் பேசுகிறோமோ அவர் முகத்தையும் பார்க்கும் வாய்ப்பு என்னுள் இருக்கிறது. செய்தி பரிமாற்றத்தில் நான் 21ஆம் நூற்றாண்டுக்கான முன்னேற்றம் கண்டு இருக்கிறோம் கையில் வைத்துக் கொண்டு பேசுவதால் என்னை 'கைபேசி' என்றும் அழைக்கின்றனர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. பிரித்து எழுதுக :

முன்னேறியுள்ளான் =

படிப்படியாக =

போர்க்காலங்கள் =

தட்டெழுத்து =

ஆ. கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க :

1. முதன் முதலில் செய்திகளை .... எடுத்துச் செல்வான்.
2. .... பறந்து சென்று செய்திகளை பரிமாற்றியது.
3. தொலைவில் உள்ளவர்களோடு பேச உதவும் கருவி ....
4. கையில் வைத்துக் கொண்டு பேசப்படும் கருவி ....

இ. கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் :

1. செய்தித்தாளில் என்னென்ன செய்திகள் வெளிவருகின்றன ?

விடை..

....

2. வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் உள்ள வேறுபாடு யாது ?

விடை..

....

3. கைபேசியின் பயன் என்ன ?

விடை..

....

©KTBS NOT TO BE REPUBLISHED

4. தபால் பெட்டியின் நிறம் என்ன ?

விடை...

....

ஈ. செயல்பாடு :

தொலைத்தொடர்பு சாதனங்கள் ஒவ்வொன்றும் தங்களைப் பற்றி தாங்களே பேசுவது போல மாணவர்களை நடிக்கச் செய்யவும்.

உ. பொருத்துக :

விண்ணில் செல்வது	மின் வெட்டு
தண்ணீர் எடுப்பது	கிரிக்கெட்டு
மட்டையில் ஆடுவது	படிக்கட்டு
படியில் ஏறுவது	ராக்கெட்டு
மின்சாரம் தடைபடுவது	பக்கெட்டு

NOT TO BE REPUBLISHED
@KTBS

ஊ. கோபுர விளையாட்டு :

தலையில் சூடுவது

பசு கொடுப்பது

காலையில் கூவுவது

காற்றில் விடுவது

பாடம் கற்பிப்பவர்

காலையில் படிப்பது

உருகி வெளிச்சம் கொடுப்பது

கொத்துக் கொத்தாய் காய்க்கும் காய்



எ. படங்களைச் சேகரித்து கட்டத்தில் ஒட்டு. அதைப் பற்றி எழுதுக.

ஆகாய விமானம்	....
	....
	....
பசு	....
	....
	....
கப்பல்	....
	....
	....

@KTBS NOT TO BE REPUBLISHED

ஏ. முதல் எழுத்தை மாற்றி வேறு சொல்லாக்கி எழுதுக.

பூங்கா	கங்கா,	...........,	....
வடை	...........,	...........,	....
பாரம்	...........,	...........,	....
லட்டு	...........,	...........,	....
வந்து	...........,	...........,	....

ஐ. ஒரு குழந்தை எழுதிய குறிப்புக்களை மற்ற குழந்தைகள் அனைவருக்கும் படித்துக்காட்டச் செய்தல். இதே போல் அனைத்து குழந்தைகள் எழுதிய குறிப்புக்களையும் படிக்க செய்தல்.

ஒ. மின் அணுவியல் (Electronics) கடைகளில் உள்ள அறிவிப்புப் பலகைக் குறிப்புக்களை எழுதிக் கொண்டு வந்து வகுப்பறையில் படிக்கச் செய்யவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

புதியதோர் உலகம் செய்வோம்.

Y3H6K4

பாடம் 14

திருக்குறள்



1. கற்க கசடற கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

2. எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
   எண்ணுவம் என்பது இழுக்கு.

3. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை.

4. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
   சான்றோன் எனக்கேட்ட தாய்.

5. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
   இன் சொலனாகப் பெறின்.

6. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று.

7. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு.

8. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
   அகநக நட்பது நட்பு.

9. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
   நன்னயம் செய்து விடல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

10. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

நூல் குறிப்பு :

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் உலகப் பொதுமறை எனப்படும். அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒரு அதிகாரத்திற்கு 10 குறள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.

பொருள் அறிக :

கசடற	-	பிழையின்றி
இழுக்கு	-	குற்றம்
கேடில்	-	அழிவில்லாத
விழுச்செல்வம்	-	சிறந்த செல்வம்
பெரிதுவக்கும்	-	மிக்க மகிழ்ச்சியடையும்
அகனமர்ந்து	-	உள்ளம் மகிழ்ந்து
ஞாலம்	-	உலகம்
மாடு	-	செல்வம்

கருத்துரை :

1. கற்க வேண்டிய நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பிழையில்லாமல் கற்க வேண்டும். கற்றபின் அதற்கேற்றவாறு நடக்க வேண்டும்.

@TBS NOT TO BE REPUBLISHED

2. செய்யத் தகுந்த செயலையும் வழிகளையும் எண்ணிய பிறகே துணிந்து தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

3. அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஏனைய செல்வங்கள் அழிந்துவிடும் தன்மையன.

4. தன் மகனை 'அறிவாளி' எனப் பிறர் புகழக் கேட்ட தாய், அவனைப் பெற்ற நேரத்தில் அடைந்த இன்பத்தைக் காட்டிலும் மிகுந்த மிகழ்ச்சி அடைவாள்.

5. முக மலர்ச்சியுடன் இனிமையாகப் பேசுதல் மனம் மகிழ்ந்து கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும்.

6. ஒருவர் செய்த நன்மையை மறந்துவிடுதல் நல்லது அல்ல! ஒருவர் செய்த தீமையை உடனே மறப்பது நல்ல பண்பாகும்.

7. ஆற்றுப்பகுதியில் மணல் கிணற்றைத் தோண்டத் தோண்ட நீர் பெருகும். அது போல நூல்களைப் படிக்க படிக்க அறிவு வளரும்.

8. முகம் மலர நட்புச் செய்வதைவிட உள்ளம் மகிழும் வண்ணம் நட்புச் செய்வதே உண்மையான நட்பாகும்.

9. தமக்குத் தீமை செய்தவரைத் தண்டித்தல் அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மை செய்து விடுதலே!.

10. உடை இடுப்பிலிருந்து நழுவும்போது, கை விரைந்து உதவுவது போல நண்பனுக்கு துன்பம் வரும்போது விரைந்து உதவுவதே சிறந்த நட்பாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. சேர்த்து எழுதுக :

எழுத்து + எல்லாம் =

எண் + என்ப =

விழு + செல்வம் =

ஆ. பிரித்தெழுதுக :

பெரிதுவக்கும் =

அகனமர்ந்து =

முகனமர்ந்து =

இ. ஒலி ஒத்த நயச் சொற்களைப் படிக்கவும் :

கற்க	-	நிற்க
அகனமர்ந்து	-	முகனமர்ந்து
அகம்	-	முகம்
காலம்	-	ஞாலம்

ஈ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. எண்ணித் துணிக ....
2. கேடில் விழுச் செல்வம் ....
3. அகனமர்ந்து ஈதலின் ....
4. தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட ....

©KTBS NOT TO BE REPUBLISHED

உ. விடை தருக :

1. எவ்வாறு கற்க வேண்டும் ?

விடை...

....

2. அழிவில்லாத செல்வம் எது ?

விடை...

....

3. தாய் எப்போது மகிழ்ச்சி அடைவாள் ?

விடை...

....

4. ஈகையை விட நல்ல செயல் யாது ?

விடை...

....

5. எதை அறிந்து செயல்பட வேண்டும் ?

விடை...

....

@KTBS NOT TO BE REPUBLISHED

ஊ. முதல் எழுத்துக்களைக் கொண்டு சொற்களை அகர வரிசைப்படுத்து.

காலம், கூடுதல், கற்றல், கொக்கு, கிளி, கோவில், கீரிப்பிள்ளை, கௌதாரி, குழந்தை, கேழ்வரகு, கெண்டைமீன்.

எ. சொற்களை இணைத்து தொடராக்குக :

குயில்		குயில் பறந்தது
அல்லி		....
புறா	மலர்ந்தது	....
ரோஜா	பறந்தது	....
கிளி		....

ஏ. செயல்பாடு :

இரு குழுக்களாக அமர்க

ஒரு குழு ஏதேனும் ஒரு சொல்லைக் கூற மற்றொரு குழு அதற்கு ஒத்த ஓசையுடைய சொல்லைக் கூறி விளையாடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

எடுத்துக்காட்டு :

முதல் குழு	இரண்டாம் குழு
காலை	மாலை

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

பாடம் 15

விழிப்படையுங்கள்

புத்தர் தம் மாணவர்களுடன் உரையாற்றிக் கொண்டிருந்தார். முன் வரிசையில் அந்த நாட்டு மன்னனும் அமர்ந்திருந்தான். அவன் அடிக்கடி வந்து புத்தரின் மொழிகளைக் கேட்பது வழக்கம்.

மன்னன் தரையில் அமர வேண்டியிருந்தது. யார் வந்தாலும் தரையில்தான் அமரவேண்டும். அங்கு யாருக்கும் தனியிருக்கை கிடையாது.

மன்னனுக்குத் தரையில் அமர்ந்து பழக்கமில்லை. உட்கார முடியாமல் சிரமத்துடன் தவித்தான். அவனை அறியாமல் அவனது கால் கட்டைவிரல் கடகடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

புத்தர் அதைக் கவனித்து விட்டார். உடனே தம் பேச்சை நிறுத்தினார்.

''ஏன் உன் கால் கட்டை விரல் அப்படி ஆடிக்கொண்டிருக்கின்றது?'' என்று கேட்டார். மன்னன் திடுக்கிட்டுக் குனிந்து தன் காலைப் பார்த்தான். பார்த்தவுடன் ஆட்டம் நின்றுவிட்டது.

அதைக் கவனித்த புத்தர், ''ஏன் விரல் ஆட்டுவதை நிறுத்தி விட்டாய்?'', என்று கேட்டார்.



NOT TO BE REPUBLISHED

''பெருமானே கால் விரல் ஆடிக்கொண்டிருந்தது எனக்குத் தெரியாது. நீங்கள் கேட்டதும் அது தானாக நின்று விட்டது. நான் ஆட்டவும் இல்லை நிறுத்தவும் இல்லை,'' என்று மன்னன் சொன்னான்.

அதைக் கேட்ட புத்தர் தம் சீடர்களை நோக்கிப் பேச ஆரம்பித்தார்.

‘‘இந்த கட்டைவிரல் இவருக்குச் சொந்தமானது. இது ஆடுகிறது. ஆனால் இவருக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாதாம். ஆனால் கவனம் வந்ததும் நின்று விட்டது. விழிப்புணர்வு தோன்றியதும் நின்று விட்டது. வெறும் விழிப்புணர்ச்சி மட்டுமே தேவை. எல்லாம் அடங்கி விடும்,’’ இவ்வாறு புத்தர் கூறினார்.

செயல்கள் :

1. உங்கள் பள்ளியில் நடைபெறும் சுதந்திர தினவிழா அல்லது கர்நாடக ராஜ்யோத்சவ தின விழா இவற்றை கூர்ந்து கவனி. நாட்டுக்காக பாடுபட்டவர்கள் கதைகளைக் கேட்டு எழுதுக.
2. உங்கள் ஊரில் மருத்துவமனை அமைந்துள்ள சூழல் நடைபெறும் பணிகள் ஆகியவற்றை விவரிக்கவும்.
3. தெனாலி ராமன் கதைகளைத் தொகுத்து வகுப்பில் கூறுக.
4. உங்கள் நண்பனை ஒரு கதை எழுதி வரச் சொல்க. அந்தக் கதையை நீங்கள் வகுப்பறையில் படித்து காட்டுக.

பயிற்சி

அ. படித்துப் பழகுக :

தனியாசனம்

பழக்கம்

திடுக்கிட்டு

விழிப்புணர்வு

©KTBS
NOT TO BE REPUBLISHED

ஆ. பிரித்தெழுதுக :

அமர்ந்திருந்தான் = ... + ...

தனியாசனம் = ... + ...

சொந்தமானது = ... + ...

விழிப்புணர்வு = ... + ...

இ. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிறைவு செய்க

1. மன்னனுக்குத் தரையில் அமர்ந்து ....
2. யார் வந்தாலும் தரையில்தான் ....
3. மன்னன் தன்காலைப் பார்த்தவுடன் கால்விரல்களின் .... நின்றுவிட்டது.
4. .... தோன்றியதும் ஆட்டம் நின்று விட்டது.

ஈ. நீங்கள் கண்ட சுவையான கனவு ஒன்றைக் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

உ. கதை எழுதுவோம் :

கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி ஒரு கதை எழுதுக.

மாலை	மழை
மயில்	தோகை
தம்பி	வேடிக்கை
அம்மா	அழைத்தார்
மயங்கி	நின்றான்

@KTBS NOT TO BE REPUBLISHED

மாலை நேரம் மழை வரும்போல் வானம் கருத்திருந்தது.

தோட்டத்தில் மயில் தோகை விரித்து ஆடிக் கொண்டிருந்தது.

தம்பி இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்மா அங்கு வந்து தம்பியை பால் குடிக்க அழைத்தார்.

ஆனால் தம்பி மயிலின் ஆட்டத்தில் மயங்கி நின்றான்.

ஊ. இதே போன்று சொற்களை எழுதி ஒவ்வொருவரும் ஒரு கதை எழுதுக.

எ. கீழ்க்கண்ட வார்த்தைகளில் உள்ள ஒற்றுமை என்ன ?

கதை	தோகை
மாலை	வேடிக்கை
மழை	ஒற்றுமை

விழித்திரு, பசித்திரு, தனித்திரு

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 16

கொன்றை வேந்தன்

U9J5D5

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

கிட்டாதாயின் வெட்டென மற.

குற்றம் பார்க்கின் சுற்றமில்லை.

கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.

சூதும் வாதும் வேதனை செய்யும்.

மருந்தே யாயினும் விருந்தோடுண்.

முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.

மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.

திரைகடலோடியுந் திரவியந் தேடு.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.

- ஔவையார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் குறிப்பு :

ஔவையார் ஒரு பெண்பாற் புலவர். அவர் இசைத் தமிழையும் நாடகத் தமிழையும் வளர்த்து வந்தார். இவரது நாடகத் தமிழ் நாடெங்கும் பரவியதில் வியப்பில்லை.

கருத்துரை :

1) தாயாரையும் தந்தையாரையும் தெய்வமாக வணங்க வேண்டும்.
2) கிடைக்காத பொருளின் மீது ஆசைப்படக் கூடாது.
3) ஒருவரின் குற்றங்களைமட்டுமே காணக் கூடாது.
4) நம்மிடம் உள்ள செல்வத்தில் கல்வியே மிகச் சிறந்தது.
5) வஞ்சகமும் வீணாக வம்பு பேசுதலும் கூடாது.
6) தான் மட்டும் தனித்து உண்ணக்கூடாது; விருந்தினர்களுடன் சேர்ந்து உண்ண வேண்டும்.
7) ஒருவருக்கும் தீமை செய்யக்கூடாது.
8) பெரியோர் வார்த்தையைக் கேட்க வேண்டும்.
9) கடல் கடந்து சென்றாவது பொருள் தேட வேண்டும்.
10) தந்தையின் வார்த்தையை வேதவாக்காகக் கொள்ள வேண்டும்.

பயிற்சி

அ. எதிர்ச் சொற்களை எழுதுக :

தந்தை x ....
பொய் x ....
பகல் x ....
தீமை x ....
பெரியோர் x ....

NOT TO BE REPUBLISHED @KTBS

ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1) ஒருவர் குற்றங்களை மட்டும் .... கூடாது.

2) செல்வத்திலும் .... மிகச் சிறந்தது.

3) தான் மட்டும் தனித்து .... கூடாது.

4) பெண்பால் புலவர்களில் ஒருவர் ....

இ. விடை எழுதுக :

1) யாரை தெய்வமாக வணங்க வேண்டும் ?

விடை..

....

2) எதன் மீது ஆசைப் படக் கூடாது ?

விடை..

....

3) யாருடைய வார்த்தையை கேட்க வேண்டும் ?

விடை..

....

4) எதை செய்யக் கூடாது ?

விடை..

....

ஈ. உங்களுக்குத் தெரிந்த பழமொழிகளை எழுதுக :

சுட்டபழம் வேணுமா ? சுடாத பழம் வேணுமா ? என்று முருகன் ஒளவை பாட்டியைப் பார்த்து கேட்ட கதையை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்க.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

©KTBS NOT TO BE REPUBLISHED

N5C1K8

பாடம் 17

அம்மா போட்ட புதிர்.



குழந்தைகள் : அம்மா ! அம்மா ! கதை கூறுங்கள்.

அம்மா : இன்று கதைக்குப் பதிலாக விடுகதை சொல்கிறேன் . கவனமாக கேளுங்கள்.



1. ஈரப் புடவைக் காரி
   28 சுற்றுக் காரி அவள் யார் ? ....



2. உருவிலே பெரியவன்
   ஊருக்கு உயர்ந்தவன்
   அவன் யார் ? ....

3. ஊர் ஊராய் சுற்றினாலும்
   உரிய இடம் வந்து சேரும்
   அது என்ன ? ....

@KTBS
NOT TO BE REPUBLISHED

4. மஞ்சள் குருவி ஊஞ்சல் ஆடுது
அது என்ன ? ....

5. எடுப்பார் கை விளக்கு
எண்ணெய் வேண்டா விளக்கு
அது என்ன ? ....

6. நாக்கு உண்டு பேச்சு இல்லை
தொப்பி உண்டு தலை இல்லை
அது என்ன ? ....

7. ஓடி ஆடி சேமித்ததை
ஒரே நாளில் பறிகொடுத்தார்கள்
அது என்ன ? ....



8. காற்றை குடித்தவன்,
கைகளில் தவழ்வான்
அவன் யார் ? ....



9. மூன்று கண் இருந்தும்
பார்வை இல்லாதவன்
அவன் யார் ? ....

@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. கீழே சில விடுகதைகள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்தபின் படங்களைப் பார்த்து விடைகளைச் சரியாகப் பொருத்துக.



1. அண்ணன் தம்பி இரண்டு பேர்
   அவர்களைச் சுற்றிப் பன்னிரெண்டு பேர்
   அது என்ன ?



2. பால்கொடுக்காமல்
   பிள்ளை வளர்ப்பவள்
   அவள் யார் ?



3. உருவத்தில் சிறியவன்
   உழைப்பில் பெரியவன் ?
   அவன் யார் ?



4. இரவில் சுமந்திடுவான்
   பகலில் சுருண்டிடுவான்
   அவன் யார் ?

© KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. செயல்பாடு :

1. ஏதேனும் பத்து விடுகதைகளைச் சேகரிக்கவும். குழுவில் கூறி விடையைக் கேட்கவும்.

2. யானை விழுங்கியவற்றைக் கண்டுபிடித்து எழுதுக.



உதாரணம்	இலை	....
	....	....
	....	....
	....	....

தாய் சொல்லைத் தட்டாதே.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 18

வீரப்பெண்மணி ஒபவ்வா

Y7X7E4

கருநாடகத்தில் வீரத்திலும், தைரியத்திலும் மிகவும் புகழ்பெற்ற பல பெண்மணிகள் இருந்தனர். அத்தகைய பெண்மணிகளுள் ஒருத்தி ஒபவ்வா ஆவாள். இப்பாடத்தில் ஒபவ்வாவின் வீரச்செயலையும், நாட்டுப்பற்றையும் பற்றி அறிந்து கொள்ளலாம்.

கருநாடகத்தின் மையப்பகுதியில் சித்ரதுர்கா மாவட்டம் இருக்கின்றது. இப்பகுதியை மதகரிநாயகன் என்ற பாளையக்காரன் ஆட்சி செய்து வந்தான். சித்ரதுர்காவின் வலிமை வாய்ந்த கோட்டை மிகவும் புகழ்பெற்றது. ஒரு சமயம் இக்கோட்டையை மைசூரை ஆட்சி செய்து வந்த ஹைதர் அலியின் படையினர் முற்றுகையிட்டனர்.

NOT TO BE REPUBLISHED

கோட்டையின் வாசற்கதவு மூடப்பட்டிருந்தது. எனவே ஹைதர் அலியின் படையினர் கோட்டையினுள் நுழைய வழியைத் தேடினர்.

ஒரு நாள், தயிர் விற்பனை செய்யும் பெண்மணி கோட்டையை நோக்கிச் சென்றாள். ஹைதர் அலியின் படைவீரர்கள் அப்பெண்மணியைப் பின்தொடர்ந்து சென்றனர். கோட்டைக்குள் சிறிய பாறைகளின் நடுவில் குறுகலான பாதையைக் கண்டனர். உடனே படைவீரர்கள் அனைவரும் பாறையின் அடியிலுள்ள சிறிய இடுக்குப் பாதையின் அருகில் சேர்ந்தனர். பிறகு இவ்விடுக்குப் பாதையின் மூலமாக கோட்டையினுள் நுழையத் தொடங்கினர்.

இடுக்குப் பாதையின் ஒரு பக்கத்தில் குளம் ஒன்று இருந்தது. அக்குளத்தின் அருகில் கோட்டையின் காவல்காரன் வீடு இருந்தது. அவன் மனைவியின் பெயர் ஓபவ்வா.

காவல்காரனுக்கு அவனது மனைவி ஓபவ்வா உணவு படைத்தாள். தண்ணீர் எடுத்து வருவதற்காக குளத்திற்குச் சென்றாள். அப்பொழுது இடுக்குப் பாதையின் அருகில் அப் படைவீரர்களின் இரகசிய பேச்சைக் கேட்டாள். கோட்டைக்கு அபாயம் வருவதை அறிந்தாள். உடனே வீட்டிற்குச் சென்று உலக்கையை எடுத்து வந்தாள். இடுக்குப் பாதையின் அருகில் தயாராக நின்றாள்.

படைவீரர்கள் ஒவ்வொருவரும் இடுக்குப் பாதையினுள் தலையை நுழைத்து வரத் தொடங்கினர். ஒவ்வொரு வீரனின் தலையைக் கண்டதும் உலக்கையால் அவரின் தலையில் அடித்துக் கொன்று போட்டாள். அந்நேரத்தில் அங்கு காவற்காரன்

©KTBS NOT TO BE REPUBLISHED

வந்தான். உலக்கையுடன் நின்றிருந்த ஓபவ்வாவைக் கண்டான். அவளது அருகில் இறந்து கிடந்த படைவீரர்களின் சடலக் குவியலைக் கண்டான்.

உடனே காவல்காரன் அபாய சங்கை ஊதினான். மதகரி நாயகனின் படைவீரர்கள் வந்து கூடினர். ஹைதர் அலியின் படை வீரர்களுக்கும், மதகரி நாயகனின் வீரர்களுக்கும் இடையே போர் தொடங்கியது. ஹைதர் அலியின் படையினர் தோற்றனர். மதகரி நாயகரின் படை வீரர்கள் வென்றனர்.

இவ்வாறு சித்ரதுர்காவின் கோட்டையை ஓபவ்வா காப்பாற்றினாள். ஓபவ்வாவை மக்கள் இன்றும் நினைவு கூறுகிறார்கள். கோட்டையின் இடுக்குப் பாதை இன்றும் ''ஓபவ்வாவின் இடுக்கு'' என்றே அழைக்கப்படுகின்றது.

தொட்டிலை ஆட்டும் கை தேசத்தையும் ஆளும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. ஒலிக்க :

பெண்மணி, நாட்டுப்பற்று, சித்ரதுர்கா, கோட்டை, புகழ், ஹைதர் அலி, நுழை, இடுக்கு, விற்பனை, படைவீரர், உலக்கை, நினைவுகூர், தோற்ற, மதகரி நாயகன்.

ஆ. பொருள் அறிக :

பாளையக்காரர் - ஒரு சிறிய பகுதியினை ஆளும் தலைவன்.

இடுக்கு - சிறிய நுழையும் பாதை.

கோட்டை	-	மிகப்பெரிய கற்களாலான பெரிய மதில் சுவர் சூழ்ந்த மன்னரின் மாளிகை.
உலக்கை	-	அரிசி குத்த மாவு இடிக்கப் பயன் படுத்தும் மரத்தினாலான ஒரு தடி.
நினைவுகூர்	-	ஞாபகப் படுத்து
முற்றுகை	-	சூழ்ந்து போரிடுதல்

இ. சேர்த்தெழுதுக :

வர + தொடங்கினர் = ...

முற்றுகை + இட்டனர் = ...

ஈ. பிரித்தெழுதுக :

படைவீரர் - ....

அடியிலுள்ள - ....

NOT TO BE REPUBLISHED @KTBS

உ. பின் வரும் சொற்களுக்கான எதிர்ச் சொற்களை அடைப்பில் இருக்கின்ற சொற்களிலிருந்து எடுத்து எழுதுக.

(பலவீனம், முடி, தொலைவில், திற)

அருகில் X ....

மூடு X ....

தொடங்கு X ....

பலம் X ....

ஊ. கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக :

1. கருநாடகத்தின் .... பகுதியில் சித்ரதுர்கா இருக்கின்றது.

2. சித்ரதுர்காவில் மிகவும் வலிமை வாய்ந்த .... இருக்கின்றது.

3. ஓபவ்வாவின் கணவன் ஒரு ....

4. ஓபவ்வா .... யினால் படைவீரர்களின் தலையில் அடித்துக் கொன்றாள்.

எ. ஒருவாக்கியத்தில் விடையளிக்கவும் :

1. கோட்டையை முற்றுகையிட்டவர் யார் ?

விடை..

....

2. ஓபவ்வா குளத்தின் அருகில் எதனைக் கண்டாள் ?

விடை..

....

3. இடுக்குப் பாதையருகில் நின்று ஓபவ்வா என்ன செய்தாள் ?

விடை..

....

4. ஓபவ்வாவை இன்றும் மக்கள் எதற்காக நினைவு கூறுகிறார்கள் ?

விடை..

....

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஏ. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி சொந்தமாக வாக்கியம் அமைக்கவும்.

1. பலமான 2. முற்றுகை 3. நாட்டுப்பற்று

4. வீரம்

ஐ. பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றுக :

உதாரணம் :	விக்க	-	விற்க
	நெனச்சா	-	....
	இருக்குதே	-	....
	பாருங்க	-	....
	புதுசு	-	....

இது போன்ற மேலும் பல சொற்களை எழுதுக.

ஒ. நிறுத்தற் குறி இடுக :

மாலா கலா இருவரும் மலர் பூங்கா ஒன்றிற்குச் சென்றனர் அங்கே மல்லிகை ரோஜா சாமந்தி போன்ற பலவகையான பூச்செடிகளைக் கண்டனர் ஆகா! என்ன அழகான காட்சி! என்று வியந்தனர்.

ஓ. செயல்பாடு 1 :

ஆசிரியரின் வழிகாட்டலுடன் இக்கதையினை நாடக வடிவில், குழந்தைகள் பாத்திரங்கள் ஏற்று நடிக்கச் செய்தல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு 2:

வீரச் செயல்கள் செய்த வீரச் சிறுவர்களின் விவரங்களைக் சேகரித்து வரக் கூறி, வகுப்பில் படித்துக் காட்டச் செய்தல்

செயல்பாடு 3:

நீங்கள் ஏதேனும் வீரச் செயல் புரிந்திருந்தாலோ, அல்லது நீங்கள் வசிக்கும் பகுதியில் யாரேனும் வீரச்செயல் புரிந்திருந்தாலோ, விவரங்களை எழுதிக் கொண்டு வந்து வகுப்பில் படித்துக் காட்டுங்கள் அல்லது விவரியுங்கள்.

செயல்பாடு 4:

பாரதத்தின் மற்ற மாநிலங்களில் வாழ்ந்த வீரப் பெண்மணிகளின் படங்களைச் சேகரித்து வந்து, அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தல்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பெண்கள் நாட்டின் கண்கள்

பாடம் 19

இசை மாமணி கங்குபாய் ஆனுகல்

S8U4W8

பள்ளிக்கூடத்தில் இறைவணக்கத்தின் போது தலைமை ஆசிரியர் மாணவர்களை நோக்கி, நாளை காலை 11 மணிக்கு நம் பள்ளி அரங்கத்தில் திருமதி கங்குபாய் ஆனுகல் அவர்களுடைய பிறந்த நாளைக் கொண்டாட இருக்கின்றோம். எல்லோரும் தவறாமல் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்றார். வகுப்பு அறையில் குழந்தைகள் ஆசிரியரிடம் கேள்வி கேட்கத் தொடங்கினார்கள்.

பவானி : கங்குபாய் ஆனுகல் யாருங்க ஐயா ?

ஆசிரியர் : கங்குபாய் ஆனுகல் 60 ஆண்டுகளாக இந்துஸ்தானி இசைத்துறையில் புகழ் பெற்று விளங்கிய பாடகி. இவர் 05.03.1931ல் தார்வாடு நகரில் பிறந்தார். அவரின் பெற்றோர் சிக்குராவ் நாடகேர் மற்றும் திருமதி அம்பாபாய் ஆவர். இவர் தாயார் ஒரு சிறந்த கருநாடக இசைப்பாடகி. கங்குபாய்

NOT TO BE REPUBLISHED

ஆனுகல் சங்கீதம் பயில 1928-ஆம் ஆண்டில், குடும்பத்துடன் ஊப்ளி என்னும் நகருக்கு இடம் பெயர்ந்தார். கங்குபாய் சவாய் கந்தர்வா என்ற குருவிடம் முறையாக சங்கீதம் பயின்றார்.

தனது 16-வது வயதில் குருநாத் கௌலகி என்பவரை கங்குபாய் மணந்தார். பாபண்ணா மற்றும் நாராயணா என்ற இரண்டு ஆண் பிள்ளைகளும் கிருஷ்ணா என்ற பெண்ணும் அவர்களுக்குப் பிறந்தனர்.

இவருடைய மனதை பல நிகழ்ச்சிகள் பாதித்துள்ளன. அவற்றில் ஒன்று இவர் ஹுலகூர் கிருஷ்ணாச்சாரியாரிடம் 12 மாதங்கள் வரை சங்கீதப் பாடத்தைக் கற்றார். கற்றுத்தந்த குரு 12 மாதத்திற்கான குரு தட்சணையாக 120 ரூபாய் உடனே தருமாறு கேட்டார். இவரிடம் பணம் இல்லாததால் 5 தோலா வளையலைக் கொடுத்தார். அதை அவர் பெற்றுக் கொள்ள மறுத்து, ரொக்கப் பணமாகத்தான் வேண்டும் என்றார். கங்குபாய் அந்த வளையலை விற்று அதில் வந்த நூறு ரூபாயைக் கொடுத்தார். ஆனால் இருபது ரூபாய் குறைவாக

உள்ளது என்று அந்த பணத்தைப் பெற்றுக் கொள்ள குரு மறுத்து விட்டார்.

இவர் சங்கீத பாடம் கற்கும் போது மேல் வீட்டில் உள்ளவர்கள் காலி டப்பாக்களை அடித்து சத்தம் செய்வது, மேலேயிருந்து தண்ணீர் ஊற்றுவது எனப் பல தொல்லைகளைக் கொடுத்தார்கள். இப்படி பல நோவு நலிவுகளுடன் தன் சங்கீத பாடத்தைக் கங்குபாய் கவனமாகக் கற்றார்.

இவருடைய கச்சேரியைக் கேட்டு பாகிஸ்தான், நேபாளம் அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி போன்ற அனைத்துலக நாடுகள் புகழ்ந்தன. 1971 - ஆம் ஆண்டில் பத்ம பூஷண் விருது, 1973 ஆம் ஆண்டில் சங்கீத நாடக அகாடெமி விருது உட்பட தேசிய அளவிலும் உலக அளவிலும் நாற்பத்தெட்டு விருதுகளைக் கங்குபாய் பெற்றுள்ளார்.

NOT TO BE REPUBLISHED @KTBS



ஊப்ளியில் தேஷ்பாண்டே நகரில் ‘கங்கா லஹரி’ என்கின்ற பழைய வீட்டில் இவருடைய விருதுகள் மற்றும் நினைவின் காணிக்கைகளை வைத்து கண்காட்சி அமைத்துள்ளனர். அரசாங்கம் இவருக்கு ஊப்ளியில் நினைவிடமும் அமைத்துள்ளது.

கருநாடகத் தமிழர் பேரவை ஊப்ளியில் கங்குபாய் ஆனுகலின் 79 வது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடியது. அவருக்கு அவ்விழாவில் 'இசைமாமணி' என்ற பட்டமும் வழங்கப் பட்டது. முன்னாள் கல்வி அமைச்சர் பசவராஜ் ஹொரட்டி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். கங்குபாய் ஆனுகல் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி இதுவே ஆகும்.

இவர் 21-06-2009ல் இயற்கை எய்தினார். இவர் மறைந்தாலும் இவருடைய சங்கீதம் மக்கள் மனதில் ஒலித்துக் கொண்டே உள்ளது.

குறிப்பு : இப்பாடம் கர்நாடகத்தின் சிறந்த இந்துஸ்தானி பாடகி கங்குபாய் ஆனுகல் அவர்களை அறிமுகப்படுத்தி இவரைப் போல் மற்ற பாடகர்களைப் பற்றி கூறுதல் முக்கிய நோக்கமாகக் கொண்டது. ஆசிரியர் இப்பாடத்தைப் படித்துக் காண்பித்து வினாக்களுக்கு குழந்தைகளை முழு விடையளிக்க வைத்தல், குழந்தைகளை வாய்விட்டு சரியான உச்சரிப்புடன் நிறுத்திப் படிக்கப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பொருள் அறிக :

பாராட்டினார் - புகழ்ந்தார்.

விருது - பரிசு

இடையூறு - தடை

உயர்வு - முன்னேற்றம்

ஆர்வம் - விருப்பம்.

படித்துப் பழகுக :

கலைக்கூடம்	குருதட்சணை
இந்துஸ்தானி	காணிக்கை
இசைத்துறை	தொந்தரவு
புகழ்பெற்று	கங்கா லஹரி
பாதித்துள்ளது	கண்காட்சி

பயிற்சி

அ. சேர்த்து எழுதுக :

1. பாதித்து + உள்ளது =..............
2. மேலே + இருந்தது =..............
3. விருது + அளித்தார் =..............
4. பிழை + இல்லாது =..............

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. பொருத்தி எழுதுக :

1. பள்ளிக் கூடம் - காணிக்கை
2. இந்துஸ்தானி - பழைய வீடு
3. குரு - தலைமை ஆசிரியர்
4. கங்கா லஹரி - பாடகி.

இ. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

1. இசை 2. புகழ் 3. பிறந்த நாள்
4. தாய் 5. வளையல்.

ஈ. மொழிப் பயிற்சி :

பார்த்து எழுதுக :

1. கங்குபாய் ஆனுகல் ஒரு சிறந்த இந்துஸ்தானி பாடகி
2. தார்வாடு நகரம் அவர்கள் பிறந்த ஊர்.
3. இவரை அனைத்துலக நாடுகள் புகழ்ந்தன.
4. இனிமையாகவே என்றும் பாடுவோம்.

உ. கேட்டு எழுதுக :

1. இந்துஸ்தானி கலைக்குப் புத்துயிர் அளித்தவர்.
2. பிறர் பாராட்டும் படி நடந்து கொள்.
3. துன்பம் மறந்திடு.
4. நல்லதே நினைப்போம், நல்லதே செய்வோம், நல்லதே நடக்கும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

5. பத்ம பூஷண், சங்கீத நாடக அகாடெமி விருது.

ஊ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. கங்குபாய் ஆனுகல் .... தேதியில் பிறந்தார்.

2. தனது 16-வது வயதில் .... என்பவரை மணந்தார்.

3. குருதட்சணையாக .... உடனே தருமாறு கேட்டார்.

4. தேசிய அளவிலும் உலக அளவிலும் .... கங்குபாய் பெற்றுள்ளார்.

எ. விடை எழுதுக :

1. கங்குபாய் ஆனுகல் பிறந்த ஊர் எது ?

விடை..

....

2. இவர் எந்த துறையில் ஆர்வம் கொண்டிருந்தார் ?

விடை..

....

3. கங்குபாய் குழந்தைகளின் பெயர் என்ன ?

விடை..

....

4. கங்குபாய் ஆனுகலுடைய குரு யார் ?

விடை..

....

@KTBS NOT TO BE REPUBLISHED

5. ஹூலகூர் கிருஷ்ணாச்சாரியாரிடம் கங்குபாய் எத்தனை மாதம் சங்கீதப் பாடத்தைக் கற்றார் ?

விடை..

....

6. கங்குபாய் ஆனுகலுக்கு 'இசைமாமணி' என்ற பட்டத்தை வழங்கியது யார்?

விடை..

....

ஏ. செயல்பாடு :

1. உங்களுக்குத் தெரிந்த பாடகர்களின் பெயரை வரிசையாக எழுதுக. அவர்களின் படத்தை சேகரித்து பெயருக்கு முன்னால் ஒட்டுக.

© KTBS
NOT TO BE REPUBLISHED

இசை மனதை கரைக்கும்

D7C4Y3

பாடம் 20

சிக்கமகளூரு மாவட்டம்



NOT TO BE REPUBLISHED @KTBS

கருநாடகத்தில் 30 மாவட்டங்கள் உள்ளன. இவற்றுள் சிக்கமகளூரு மாவட்டமும் ஒன்று. இம் மாவட்டத்தின் தலைநகரம் சிக்கமகளூரு ஆகும்.

சிக்கமகளூரு மாவட்டத்தின் வடக்கில் ஷிவமொக்கா மாவட்டம், தெற்கில் ஹாசன் மாவட்டம் மற்றும் தென்கன்னடா மாவட்டம், கிழக்கில் சித்ரதுர்கா மாவட்டம், மேற்கில் உடுப்பி மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

சிக்கமகளூரு இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டம் ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒருபகுதி இதன் வழியே செல்கிறது. எனவே இந்த மாவட்டத்தில் மலைகளும் காடுகளும் அதிகம். இந்த மலைப்பிரதேசத்தில் காப்பித் தோட்டங்கள் அதிகமாக உள்ளன. ஆங்காங்கே தேயிலைத் தோட்டங்களும், ரப்பர் தோட்டங்களும் பச்சைப் பசேல் என்று காட்சியளிக்கின்றன.

லக்கவள்ளியில் ஓடும் 'பத்ரா' நதியின் குறுக்கே அணை கட்டப்பட்டுள்ளது. இதனை 'பத்ரா அணை' என்று அழைக்கின்றனர். இந்த அணையிலிருந்து வேகமாகக் கீழே விழும் நீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கின்றனர். இதை 'நீர் மின் சக்தி' என்பர்.

இந்த அணை நீரைப் பயன்படுத்தி பல்லாயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாயம் செய்கின்றனர். விவசாய நிலங்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமையாகக் காட்சியளிக்கின்றன. இக்காட்சி கண்களுக்குக் குளிர்ச்சியையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் தருகின்றது.

© KTBS Not to be republished

இங்கு நெல், பாக்கு, தென்னை முதலியன அதிகமாக விளைகின்றன.



காப்பி, ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் விவசாய நிலங்களில் உழைப்பவர்கள் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆவர்.

இம்மாவட்டத்தில் பல சுற்றுலாத் தலங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை :

1. தரிகரே வட்டத்திலுள்ள லக்கவள்ளி வனவிலங்கு சரணாலயம்.
2. நரசிம்மராஜபுரம் வட்டத்திலுள்ள முத்தோடியில் யானைகள் சரணாலயம்.
3. சிக்கமகளூரு வட்டத்தில் மாணிக்கதாரா நீர்வீழ்ச்சி மற்றும் எப்பே நீர் வீழ்ச்சி.
4. தரிகரே வட்டத்திலுள்ள கல்லத்திகிரி நீர்வீழ்ச்சி மற்றும் கெம்மண குண்டி கோடை வாழிடம்.



சிருங்கேரியில் உள்ள சிருங்கேரி சாரதாம்பாள் பீடம், சாரதாம்பாள் கோவில் மற்றும் ஒரநாடு அன்னபூரணேஸ்வரி கோவில்கள் புகழ்பெற்றவை.

இச் சுற்றுலாத் தலங்களுக்கு கருநாடக மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், இந்தியாவிலுள்ள பல மாநிலங்களில் இருந்தும் மாணவர்களும், பொதுமக்களும் இன்பச் சுற்றுலா வருகின்றனர்.

NOT TO BE REPUBLISHED

மாணவர்களே ! நீங்களும் மேற்கண்ட இடங்களுக்கு சுற்றுலா மேற்கொண்டு, அவ்விடங்களின் இயற்கை அழகைக் கண்டு மகிழுங்கள்.

© KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. கருநாடக மாநிலத்தில் .... மாவட்டங்கள் உள்ளன.
2. சிக்கமகளூரு மாவட்டத்தின் கிழக்கே .... உள்ளது.
3. லக்கவள்ளியில் ஓடும் .... நதியின் குறுக்கே அணை கட்டப்பட்டுள்ளது.
4. அணையிலிருந்து விழும் நீரைப் பயன்படுத்தி .... தயாரிக்கப்படுகிறது.
5. தேயிலைத் தோட்டத்தில் உழைப்பவர்களில் பெரும்பாலோனோர் ....

ஆ. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :

1. கருநாடக மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் பெயர்களை எழுதுக.

விடை..

....

....

2. சிக்கமகளூரின் எல்லைகளை எழுதுக.

விடை..

....

3. நீர் மின் சக்தி தயாரிப்பது போல் வேறு எந்தெந்த வகைகளில் மின்சக்தி தயாரிக்கலாம் ?

விடை..

....

4. பத்ரா அணையிலிருந்து வரும் நீரைப் பயன்படுத்திப் பயிரிடப்படும் பயிர்கள் யாவை ?

விடை..

....

5. சிக்கமகளூரு மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களின் பெயர்களை எழுதுக.

விடை..

....

@KTBS NOT TO BE REPUBLISHED

இ. பொருத்தி எழுதுக :

முத்தோடி	நீர்வீழ்ச்சி
மாணிக்கதாரா	கோடைவாழிடம்
கெம்மணகுண்டி	அன்னபூரணேஸ்வரி கோவில்
ஒரநாடு	யானைகள் சரணாலயம்

ஈ. சேர்த்தெழுதுக :

மலை + பிரதேசம் = ...

இயற்கை + அழகு = ...

தெற்கு + கன்னடம் = ...

உ. பிரித்தெழுதுக :

தேயிலைத் தோட்டங்கள் = ... + ...

அணையிலிருந்து = ... + ...

இன்பச்சுற்றுலா = ... + ...

ஊ. செயல்பாடு :

நீங்கள் சென்று மகிழ்ந்த சுற்றுலாத் தலங்களைப் பற்றி கட்டுரை வரைக.

இறைவன் அளித்த வரம் இயற்கை.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 21

படவிளக்க அகராதி

C2Z8T2

கழுதை :

சாதுவான வீட்டு விலங்கு. பொதி சுமக்கப் பயன்படும். இதன் பால் சிறு குழந்தைகளுக்கு உடல் வெப்பத்தை அதிகரிக்கக் கொடுப்பர். இது மிரண்டு ஓடினால் அனைவரும் விலகி ஓடுவர்.



காகம் : கருமையானது. ஆனால், அழகான பறவை. ஒற்றுமைக்கு காக்கை கூட்டத்தை உதாரணமாகக் கூறுவர். தான் மட்டும் தனியாக உண்ணாமல் தனது இனத்தை கரைந்து (அழைத்து) கூட்டமாக உண்ணும்.



©KTBS NOT TO BE REPUBLISHED

கிளி : வீட்டில், காட்டில் எங்கும் வளரும் சிறிய அழகான சிறு பறவை. பொதுவாக உடல் பச்சையாகவும் மூக்கு சிவப்பாகவும் வளைந்தும் இருக்கும். நாம் பேசுவதைத் திருப்பிப் பேசும் திறன் கொண்டது.



கீரிப் பிள்ளை : இதை பாம்பின் எதிரி என்பர். பொதுவாக காடுகளில் காணப்படும். சில நேரங்களில் வயல்வெளிகளிலுள்ள புதர்களில் காணப்படும். மிகவும் பயந்த தன்மை கொண்டது.



© NIEBS NOT TO BE REPUBLISHED

குதிரை :

இது கழுதை இனம். மிக வேகமாக ஓடக் கூடிய வீட்டு விலங்கு. மோட்டார் என்ஜின்களின் ஆற்றலைக் குறிக்க இதனை உவமையாக கூறுவர். மைசூர், சென்னை, ஊட்டி ஆகிய இடங்களில் குதிரைப் பந்தயம் நடத்தப் படுகிறது.



கூடு : குருவி தான் வசிப்பதற்காக நீர் நிலைகளின் அருகிலுள்ள மரக்கிளைகளில் சிறிய புற்களைக் கொண்டு கட்டும் வீடு கூடு என்றழைக்கப்படுகிறது. மனிதனாலும் கட்ட முடியாத அதிசய வீடு இந்தக் கூடு.



கொரில்லா : குரங்கு இனம். முரட்டுத் தனமான காட்டு விலங்கு. ஆப்பிரிக்கா கண்டத்தில் அடர்ந்த காடுகளில் வசிக்கும். மனிதனைப் போன்றே தோற்றம் உடையது.

© KTBS NOT TO BE REPUBLISHED

கோவில் :

இந்து மதத்தினரின் வழிபாட்டுதலம். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலும் மைசூரில் சாமுண்டீஸ்வரி கோயிலும் பிரசித்தி பெற்றவை.

NOT TO BE ©

பயிற்சி

அ. பட விளக்க அகராதியை கூர்ந்து கவனிக்க. முதல் எழுத்துக்களை மட்டும் அகரவரிசையில் எழுதுக. இடையில் விடுபட்டுள்ள இரண்டு எழுத்துக்களை எழுதுக.

ஆ. பட விளக்க அகராதியை உருவாக்கவும்.

படங்களைச் சேகரிக்கவும். கொடுக்கப்பட்ட கட்டங்களில் ஒட்டவும். ஒவ்வொன்றைப் பற்றியும் மூன்று வரிகளுக்குக் குறையாமல் எழுதவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

இ. கீழ்க்கண்ட கட்டத்தில் உள்ள எழுத்துக்களை அகர வரிசையில் எழுதுக.

ம ஆ மெ எ ஃ மொ மீ அ	மௌ
எ மூ ஐ மி ஈ மை உ மு ஓ	
இ ஒ மோ ஊ ஏ மா மே	ஔ

ஈ. உங்களுக்குத் தெரிந்த மிருகங்கள் பறவைகள், பிற பொருட்களின் படங்களைச் சேகரித்து அகர வரிசையில் அவற்றின் பெயர்களை எழுதி அதற்கு நேராகப் படங்களை ஒட்டுக. இதை குழந்தைகள் குழுக்களாக பிரிந்து, கூடி செய்யலாம்.

உ. தமிழ் நாளேடுகளிலிருந்து எழுத்துக்களை வெட்டியெடுத்து (கத்தரித்து) அகர வரிசையில் அட்டைகளில் ஒட்டுக. :

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஈதல் இன்பம். வறியார்க்கு ஈவதே ஈகை.

சொற் பட்டியல்

கூ

கூறு

கூவுது

கூடுதல்

கெ

கெடு

கே

கேள்

கேழ்வரகு

கேள்வி

கேட்டார்

கேளுங்கள்

கை

கைபேசி

கைது

கொ

கொடி

கொடு

ச

சங்கீதம்

சங்கம்

சரி

சந்தித்து

சந்திரன்

சடலக் குவியல்

சரணாலயங்கள்

சாப்பிடு

சி

சிக்கமகளூர்

சிரமம்

சிவமுகா

சிலுவை

சிறந்த

சிவப்பு

சிருங்கேரி

சித்திரதுர்கா

சினிமா

சிக்கனமாக

சு

சுருண்டு

சுற்றுலாத்தலங்கள்

சுதந்திரம்

சுற்றமில்லை

சுமக்க

செ

செல்வம்

செய்தித்தாள்

செய்தி

சே

சேமிப்பு

சேர்ந்து

சை

சைகை

சொ

சொல்

சோ

சோறு

த

தண்டு, தந்தி

தலைமை,

தட்டெழுத்து

தட்சணை, தபால்

தரிகெரே

தம்பி

தயாராகு

தா

தாங்கு

தாவி

தாகம்

தாய்

தாராளம்

தி

திடுக்கிட்டு

திங்கள்

தினம்

திரவியம்

திருமதி

தீ

தீமை

து

துங்கபத்ரா

துணிந்து

துச்சமாக

©KTBS NOT TO BE REPUBLISHED

தெ
தென்கன்னடா
தெளிதேன்
தெரிவி
தெரியும்
தெரியாது
தே
தேயிலை
தேன்
தேசபந்து
தேவதை
தை
தை மாதம்
தொ
தொடர்கதை
தொழில்
தொப்பி
தொழிற்சாலை
தொடக்கம்
தொலைபேசி
தொடர்பு
தோ
தோப்பு
தோழி
தோற்றம்
ந
நகர்
நமது
நலிவு
நன்மை
நல்ல

நரசிம்மராஜபுரம்
நட்டு
நடுவில்
நண்பர்கள்
நன்றி
நா
நாடு
நாடெங்கும்
நாட்கள்
நாடகம்
நி
நிகழ்ச்சி
நிலங்களில்
நிறம்
நிறை
நிற்குது
நிலம்
நிறைவேறியது
நீ
நீர்
நீளம்
நீத்தான்
நீலம்
நு
நுழை
நூ
நூல்
நூற்றாண்டு
நெ
நெசவாளன்

நோ
நோன்பு
நோக்கம்
நோய்
ப
பரிமாற்றம்
பழக்கம்
பண்டிகை
பங்கேற்பு
பயிர்கள்
பந்தயம்
பள்ளிக்கூடம்
பணம்
பகல்
பச்சைப்பசேல்
பத்ரா
பசுமையாக
பள்ளி
பழங்கள்
பறவை
பச்சை
படங்கள்
பரிமாறி
பழமொழி
பறந்து
பா
பாடகி
பாதித்து
பாடம்
பார்வை
பால்

@TBS NOT TO BE REPUBLISHED

பாகும்
பாடும்பாட்டே
பாம்பு

பி
பிறை
பிராத்தனை
பிரசித்தி
பிள்ளை
பிளவுபடும்
பிரிந்து
பிடி
பிறந்தான்
பு
புத்தாடை
புகழ்
புத்தர்
புதிர்
பூ
பூ
பூஷண்
பெ
பெயர்
பெற்றான்
பெருமானே
பெண்
பெரியவன்
பெருமை
பெற்ற
பெண்மணி

பே
பேசு
பேச்சு
பேராசை
பொ
பொங்கல்
பொருள்
பொதி
போ
போராட்டம்
ம
மகிழ்வு
மருத்துவமனை
மரம்
மதத்தினர்
மடல்
மங்கலம்
மரக்கிளை
மணம்
மகிழ்ந்து
மா
மாணிக்கதாரா
மாணவர்
மாவட்டங்கள்
மீ
மீனவன்
மு
முடியாது
முறை
முரடு

முன்பு
முன்னேறி
முகம்
முதல்
முழுமை
முத்தமிழே
முத்தோடி
மூ
மூன்று
மூக்கு
மூடுபனி
மூட்டை
மூத்தோர்
மெ
மெய்ப்பொருள்
மே
மேற்கு
மை
மைசூர்
மையப் பகுதி
மோ
மோட்டார்
யா
யானை

@KTBS NOT TO BE REPUBLISHED

ர
ரப்பர்
ரம்சான்
வ
வலக்கரம்
வணக்கம்
வகுப்பறை
வலுப்படுத்து
வழிபாடு
வகைப்படுத்து
வரிசை
வளரும்
வடக்கு
வடிவம்
வண்ணம்
வயது
வளையல்
வலுவடைந்து
வா
வானொலி
வான்வெளி
வாய்ப்பு
வாசல்
வாழை
வாலிபன்
வாழ்த்து
வானிலை
வி
விளக்கம்
விழிப்பு
விவசாயம்
விரைந்து
விடை
விடுகதை
விருந்தோடுண்
விளக்கு
விலக்கு
விருது
விரும்பு
விழா
விருப்பம்
விளையாடு
விருப்பப்படி
வினா
விலங்கு
விரைவு
விடுமுறை
விதை
விவரி
விளம்பரம்
வீ
வீர முழக்கம்
வீடு
வீரத்திலும்
வீசினான்
வீணாக்க
வெ
வெட்கம்
வெட்டென
வெள்ளை
வெட்டு
வே
வேடிக்கை
வேகமாக
வை
வைகை
வையமான

@KTBS NOT TO BE REPUBLISHED

NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED

NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED